**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**
**MCOP 105/2023**

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3 ஆம் நாள் வியாழக்கிழமை எ.ம.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. செல்வமணி Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ஆதித்யவிஷ்வா | த/பெ.: | சேதுராஜன் |
| கிராமம்: | தஞ்சாவூர் டவுன் | தாலுக்கா: | தஞ்சாவூர் |
| மதம்: | இந்து | தொழில்: | நியூ இன்டியா அசுரன்ஸ் நிர்வாக அதிகாரி |
| வயது: | 25 | முகவரி: | தஞ்சாவூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 03.04.2025.

**முதல் விசாரணை:_**

நான் இந்த மனுவில் 2–ம் எதிர்மனுதாரர் ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண பிரமான வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. பின்வரும் ஆவணங்களை என் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | |
|---|---|---|---|
| எ.ம..சா.ஆ.1 | 13/07/2024 | 1ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு | நகல் |
| எ.ம..சா.ஆ.2 | 13.07.2024 | 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு நகல் | நகல் |
| எ.ம.சா.ஆ.3 | 19.07.2024 | நாங்கள் அனுப்பிய அறிவிப்பை 1ம் எதிர்மனுதார் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை | நகல் |
| எ.ம.சா.ஆ.4 | 19.07.2024 | நாங்கள் அனுப்பிய அறிவிப்பை 1ம் எதிர்மனுதாரின் ஓட்டுநர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை | நகல் |
| எ.ம.சா.ஆ.5 | | 1ம் எதிர்மனுதாரர் வாகன காப்பீடு | நகல் |

மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென பிரார்த்திக்கிறேன்.

**<u>மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை .</u>**

எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ள வாகனங்கள் விபத்து ஏற்பட்டால் அதற்கான இழப்பீடு நாங்கள் தான் தர வேண்டும் என்றால் சரியல்ல. காப்பீடு நிபந்தனைகளுக்குட்பட்டு விபத்து நடந்தால் மட்டுமே எங்கள் நிறுவனம் பொறுப்பேற்கும். விபத்து நடந்த தேதியில் 1ம் எதிர்மதாரருக்கு சொந்தமான வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பு வழக்கிற்கு பின்புதான் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். எங்களுக்கு தெரிய வந்த பிறகுதான நாங்கள் அறிவிப்பு அனுப்பினோம். 1ம் எதிர்மனுதாரர் வாகனம் எங்கள் நிறுவனத்தில் விபத்து தேதியில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால், எங்கள் நிறுவனம்தான் இழப்பீடு வழங்கவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை:– இல்லை.</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.